**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை :- திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 13 ம் நாள்

**இடைநிலை மனு எண். 14/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 91/2021**

ராஜேஷ் ..... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிர்//**

ராணி ...... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரருக்கு எதிராக கடந்த 16.12.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து (Set – aside) உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1 ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கடந்த 16.12.2024 ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி அசல் வழக்கில் வாதியை குறுக்கு

விசாரணை செய்யப்படாததால் கடந்த 16.12.2024 ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்திற்கு முன்பாகவே மனதாரருக்கு விஷசாய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் மனுதாரரது வழக்கறிஞரை சந்தித்து விவரங்கள் தெரிவித்து வாதியை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. பிறகு மனுதாரர் வழக்கறிஞரை நேரில் சந்தித்து வழக்கு குறித்து விளக்கங்கள் கேட்டபோது வாதியை குறுக்கு விசாரணை செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வழக்கு நடத்த இயலாமல் இல்லை. மேற்படி மனுதாரர் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே கடந்த 16.12.2024 ம் தேதியில் மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து (Set – aside) உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாதபட்சத்தில் மனுதாரர் / பிரதிவாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். ஆகவே கடந்த 16.12.2024 ம் தேதியில் மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து (Set – aside) உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

இந்த மனு சட்டப்படி, நியாயப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை. பொய்யான பல விவரங்களை கூறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதியான எதிர்மனுதாரரை வாதி தரப்பு சாட்சியாக கடந்த 16.12.2022 ல் விசாரணை செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு பல முறை வாய்ப்பு

கொடுக்கப்பட்டும் மனுதாரர் தரப்பில் வாதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. மேற்படி கடந்த 18.11.2024, 04.12.2024, 16.12.2024 ஆகிய தேதிகளிலும் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக கேட்பு தேதி போடப்பட்டும் அந்த தேதிகளிலும் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர் தரப்பில் முன்வரவில்லை. அதனால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவாகியுள்ளது.

இந்நிலையில் வேண்டுமென்று அலட்சியமாக வழக்கை நடத்த முன்வராமல் இருந்துவிட்டு காலம் கடந்து கடந்த 08.01.2025 ம் தேதியில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு விஷக்காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் சரியில்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. இந்த மனுவிற்கு தோதாக சொல்லப்பட்டுள்ள பொய்யான காரணம் ஆகும். மனுதாரர் சொல்லியுள்ள காரணத்திற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை.

வழக்கு சொத்தை மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் ஏற்கனவே வாதி குடும்பத்தாருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்ட நிலையில் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக கிரய ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்பதை மனுதாரர்/பிரதிவாதிக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வாதியின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறார். வழக்கு சொத்தை எந்த வகையிலாவது அபகரித்துக்கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு மனுதாரர் இவ்வழக்கை நடத்தி வருகிறார். மனுதாரரின் மனுவை ஏற்றுக்கொள்ளக்கூடிய முகாந்திரம் எதுவும் இல்லை என்பதால் இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u>:-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, மனுதாரர் தரப்பில் கடந்த 16.12.2024 ம் தேதியில் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டு மேற்படி தேதியில் வாதியை குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வருகிறது.

**4.** இந்நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் கடந்த 16.12.2024 ம் தேதிக்கு முன்பாகவே மனுதாரருக்கு விஷகாய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் மனுதாரர் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு குறித்து விளக்கங்கள் கேட்டபோது வாதியை குறுக்கு விசாரணை செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததாக மனுவில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கில் கடந்த 16.12.2024 ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து (Set – aside) உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர்

தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதாலும் கூட இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர்/பிரதிவாதிக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதி நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

6) **முடிவில்**, மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ கடந்த 07.03.2025 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 07.03.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 13 ம் நாள்

**இடைநிலை மனு எண்.14/2025 -ல்**

**அசல் வழக்கு எண்.91/2021**

திரு. ராஜேஷ், வயது 40, த/பெ. கலியபெருமாள, இந்து, வசிப்பிடம், கதவிலக்கம் 2/59, தெற்குதெரு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

திருமதி.ராணி, வயது 38, க/பெ.லேட்.ராஜா, இந்து, வசிப்பிடம், தெற்கு தெரு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவில் மனுதாரருக்கு எதிராக கடந்த 16.12.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து (Set – aside) உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 07.01.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 08.01.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ கடந்த 07.03.2025 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 07.03.2025.

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 23 ம் நாள்

**இடைநிலை மனு எண்.14/2025 -ல்**

**அசல் வழக்கு எண்.91/2021**

திரு. ராஜேஷ், வயது 40, த/பெ. கலியபெருமாள, இந்து, வசிப்பிடம், கதவிலக்கம் 2/59, தெற்குதெரு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/பிரதிவாதி

//எதிர்//

திருமதி.ராணி, வயது 38, க/பெ.லேட்.ராஜா, இந்து, வசிப்பிடம், தெற்கு தெரு, ஆலங்கோட்டை கிராமம், மன்னார்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவில் மனுதாரருக்கு எதிராக கடந்த 16.12.2024 ம் தேதி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து (Set – aside) உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 07.01.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 08.01.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. செலவுத்தொகை செலுத்தப்பட்டது.

02. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 07-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.